**<u>சுருக்கம்</u>**

ஆதிதிராவிடர் நலம்–கல்வி–உயர்நிலைப்பள்ளி/மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பதவி உயர்வுக்கான துறைத் தேர்வுத் தகுதி நிர்ணயம் செய்வது–கல்வித்துறையில் வெளியிடப்பட்ட ஆணைகளை பின்பற்றி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கான பணி விதிகளில் திருத்தம்–ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதி7)துறை**

**அரசாணை (நிலை) எண்.143** **நாள்.17.11.2006**

**படிக்க**

1. அரசாணை (நிலை)எண்.405, உள்துறை, நாள். 2.2.1963
2. அரசாணை (நிலை) எண். 880, சமூக நலத்துறை, நாள். 21.10.1976
3. அரசு கடிதம் எண். 65986/ ஆதி7/81–12, நாள். 23.1.83
4. அரசாணை (நிலை) எண். 2283, சமூக நலத்துறை, நாள். 12.11.1987
5. அரசாணை (நிலை) எண்.136, பள்ளிக்கல்வி துறை, நாள்.14.8.2006
6. அரசு கடித எண். 26906/எ1/2002–22, பள்ளி கல்வித்துறை நாள். 29.9.2006
7. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடித எண். எ1/17166/2006, நாள். 15.11.2006

**ஆணை**

மேலே 1 முதல் 3 வரை படிக்கப்பட்ட அரசாணைகளில் தற்போதுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல உயர்நிலைப்பள்ளித்தலைமை ஆசிரியர்களுக்கான பணி விதிகளில் அரசு உயர்நிலை பள்ளித்தலைமை ஆசிரியர்களுக்கான கீழே குறிப்பிட்டுள்ளவாறு துறைத் தேர்வுகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.

1. சார்நிலை அலுவலருக்கான கணக்குத் தேர்வு பாகம் 1 (அல்லது) செயல் அலுவலருக்கான கணக்குத்தேர்வு
2. மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வு
3. பள்ளித்துணை ஆய்வர் தேர்வு 3 தாட்கள்

2. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட அரசாணையில் தற்போதுள்ள தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மேல்நிலைக் கல்வி பணிக்கான சிறப்பு விதிகளில் விதி 6 (அ)ல் கண்ட இணைப்பில் அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மேல்நிலைப்பள்ளிதலைமை ஆசிரியர்களுக்கு கீழே குறிப்பிட்டுள்ளவாறு துறைத் தேர்வுகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.

செயல் அலுவலருக்கான கணக்குத் தேர்வு (அல்லது) சார்நிலை அலுவலருக்கான கணக்குத் தேர்வு பாகம் 1

3.மேலே 5ல் படிக்கப்பட்ட அரசாணை மற்றும் 6–ல் படிக்கப்பட்ட அரசு கடிதங்களில் கல்வித்துறையின் கீழ் இயங்கும் அரசு உயர்நிலைப்பள்ளி/மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கான பதவி உயர்வுக்கு துறைத் தேர்வுகள் நிர்ணயம் செய்வது தொடர்பாக மாற்றியமைத்து ஆணையிடப்பட்டுள்ளது.

4. ஆதிதிராவிடர் நல இயக்குநர் அவர்கள் மேலே 7ல் படிக்கப்பட்ட கடிதத்தில் கல்வித்துறையின் பணி விதிகள் ஆதிதிராவிடர் நலத்துறைக்கும் பொருந்தும் என்பதால் ஏற்கனவே (Existing) நடைமுறையில் உள்ள பணி விதிகளின்படி ஆதிதிராவிடர் நலத்துறையில் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட தேர்வுகளை அரசாணை (நிலை) எண். 136 பள்ளிக்கல்வி துறை, நாள்.14.8.2006 மற்றும் அரசுக் கடித எண். 26906/ஏ1/2002-22 பள்ளிக்கல்வித்துறை, நாள். 29.9.2006ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளபடி மாற்றியமைத்து இத்துறைக்கென தனியே அரசாணை வெளியிடும்படி கேட்டுக்கொண்டுள்ளார்.

5. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து ஆதிதிராவிடர் நல மற்றும் பழங்குடியினர் நல உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள்/ மேல்நிலைப்பள்ளித்தலைமை ஆசிரியர்களுக்கு ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட துறைத் தேர்வுகளை பள்ளிக் கல்வித்துறையில் வெளியிடப்பட்ட ஆணைகளை பின்பற்றி கீழ் கண்டுள்ளவாறு மாற்றியமைத்து அரசு ஆணையிடுகிறது.

| வ.எண். | பணியிடம் | முன்விதிகளின்படி நிர்ணயிக்கப்பட்ட தேர்வுகள் (Existing) | தற்போது நிர்ணயம் செய்யப்படும் தேர்வுகள் (Revised) |
|---|---|---|---|
| 1. | அரசு (ஆதிதிராவிடர் நலம்) உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் | சார்நிலை அலுவலருக்கான கணக்குத் தேர்வு பாகம் 1 (அல்லது) செயல் அலுவலருக்கான கணக்குத்தேர்வு | சார்நிலை அலுவலருக்கான கணக்குத் தேர்வு பாகம் 1 (அல்லது) செயல் அலுவலருக்கான கணக்குத்தேர்வு |
| | | மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வு | மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வு (தற்போது தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வு) |
| | | பள்ளித்துணை ஆய்வர் தேர்வு 3 தாட்கள் | |
| 2. | அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் | செயல் அலுவலருக்கான கணக்குத்தேர்வு (அல்லது) சார்நிலை அலுவலருக்கான கணக்குத்தேர்வு (பாகம்1) | சார்நிலை அலுவலருக்கான கணக்குத்தேர்வு (பாகம்1) அல்லது நிர்வாக அலுவலருக்கான கணக்குத்தேர்வு |
| | | | மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வு (தற்போது தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வு) |